# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1904/57 - 2015 මාර්තු මස 06 වැනි සිකුරාදා - 2015.03.06

*1904/57 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : சி எஸ்ஏ / 7/சி ஓஐ/எம்எஸ்/01*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

முத்திரை

மைத்திரிபால சிறிசேன

1. சனாதிபதி சட்டத்தரணி மாண்புமிகு வெவகே பிரியசாத் ஜெராட் டெப் அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
2. மாண்புமிகு அனில் குணரத்ன அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
3. குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
4. சரத் சந்திரசிறி மாயாதுன்னே அவர்கள்
   ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் அதிபதி
5. சனாதிபதி சட்டத்தரணி அய்யாத்துரை ஞானதாசன் அவர்கள்
   ஓய்வுபெற்ற மேலதிக மன்றாடி அதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

2010, சனவரி 10 ஆந் திகதியிலிருந்து 2015, சனவரி 10 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் அரசியல் பதவிகளை வகித்தவர்களினதும் அல்லது தொடர்ந்து வகித்துக் கொண்டிருப்பவர்களுமான நபர்களினதும் அரசாங்க சேவையாளர்களாக அத்துடன் நியதிச் சட்டமுறை சபைகளின் உத்தியோகத்தர்களாக சேவையில் இருந்தவர்களினதும் அல்லது தொடந்து இருப்பவர்களுமான நபர்களினதும் விடயத்தில் ஊழல், மோசடி, சொத்துக்களின் குற்றவியல் ரீதியான கையாடல், நம்பிக்கைப் பொறுப்பின் குற்றவியல் ரீதியான மீறுகை, ஏமாற்றுதல் மற்றும் அதிகாரத்தை அல்லது அரச வளங்களையும் சலுகைகளையும் துஷ்பிரயோகம் செய்தல் ஆகிய பிழையான நடவடிக்கைகள் தொடர்பில் அநேக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் இவர்களின் விடயத்தில் இச்செயல்கள் அரசாங்க சொத்துக்களுக்கும் வருமானத்திற்கும் பாரதூரமான நட்டத்தை, சேதத்தை விளைவித்துள்ளதாக பாரதூரமான முறைப்பாடுகளும் குற்றச்சாட்டுக்களும் கிடைக்கப்பெற்றுள்ளதாதலாலும்,




இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2- G 21159

மேலும், அத்தகைய முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுதந்திரமானவைகளும் பக்கச் சார்பற்றவைகளும் விரிவானவைகளுமான எந்தக் குற்றவியல் விசாரணைகளும் ஆய்வுகளும் செய்யப்படவில்லை என்பதனாலும் அத்தகைய சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பொறுப்பாக இருந்தவர்களுக்கு எதிராகத் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாததனாலும்,

இலங்கையின் கரிசனை , அரசாங்கத்தின் கரிசனைகள் மற்றும் பொதுமக்களின் கரிசனை, நலனோம்பல் விடயங்களில் சட்டமானது பொருத்தமான முறையில் வினைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்காக ஆய்வுகளையும் விசாரணைகளையும் நடத்துவிப்பதற்கும் பிழையான முறையில் நடந்தவர்களுக்கு பொருத்தமான முறையில் தண்டனை வழங்குவதற்கும் தவறுகளும் அதிகாரத் துஷ்பிரயோகமும் அல்லது பிழையான பிரயோகமும் அல்லது அதிகாரமும் போன்ற குற்றஞ்சாட்டப்பட்ட செயற்பாடுகள் எதுவும் திரும்பவும் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு சட்டமானது வினைமுறைப்படுத்தப்படுவதை நிர்ணயிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்கும்,

எனவே, இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்படும் கருமங்கள் குறித்து ஆராய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிப்பது அவசியமானதென்பதே எனது கருத்தாக இருப்பதாலும்,

ஆகவே, தற்போது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயத்தின்) 02 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சொல்லப்பட்ட,

1. சனாதிபதி சட்டத்தரணி மாண்புமிகு வெவகே பிரியசாத் ஜெராட் டெப் அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
2. மாண்புமிகு அனில் குணரத்ன அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
3. குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
4. சரத் சந்திரசிறி மாயாதுன்னே அவர்கள்
   ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் அதிபதி
5. சனாதிபதி சட்டத்தரணி அய்யாத்துரை ஞானதாசன் அவர்கள்
   ஓய்வுபெற்ற மேலதிக மன்றாடி அதிபதி

ஆகிய தங்களை, பின்வரும் அதாவது பெயரளவில் பின்வரும் விடயங்கள் மீது, ஆய்வுகளையும் விசாரணைகளையும் செய்வதற்கு எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

1. 2010, சனவரி 10 ஆந் திகதியிலிருந்து 2015, சனவரி 10 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் அரசியல் பதவிகளை வகித்தவர்களினதும் அல்லது தொடர்ந்து வகித்துக் கொண்டிருப்பவர்களினதும் அரசாங்க சேவையாளர்களாக இருந்தவர்களினதும் அத்துடன் நியதிச்சட்ட முறை சபைகளின் உத்தியோகத்தர்களாக இருந்தவர்களினதும் அல்லது தொடர்ந்து இருக்கின்றவர்களுமான நபர்களினதும் விடயத்தில் ஊழல், மோசடி, சொத்துக்களின் குற்றவியல் ரீதியான கையாடல், நம்பிக்கைப் பொறுப்பின் குற்றவியல் ரீதியான மீறுகை, ஏமாற்றுதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல் அல்லது அதிகாரத்தைப் பிழையாக பயன்படுத்துதல் ஆகிய பிழையான நடவடிக்கைகள் தொடர்பில் பாரதூரமான அநேக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றவர்களின் விடயத்தில் இச்செயல்கள் அரசாங்க வளங்களுக்கும் வருமானத்திற்கும் பாரதூரமான நட்டத்தையும், சேதத்தையும் விளைவித்துள்ளதாதலால் அவை மீதான மக்களின் முறைப்பாடுகளையும் தகவல்களையும் வரவழைத்தலும் பெற்றுக்கொள்ளலும் ;

2. மேலே உள்ள 1 ஆம் பந்தியில் கோரப்பட்டுள்ள முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் பற்றி உடனடியானதும் பக்கச்சார்பற்றவைகளுமான விரிவான ஆய்வுகளையும் விசாரணைகளையும் நடாத்துவதற்கும் ;

3. சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் அத்தகைய தவறுகளையும் பிழையான நடவடிக்கைகளையும் அதிகாரத்தின் துஷ்பிரயோகத்தையும் அல்லது பிழையான பயன்படுத்துகையையும் மேற்கொண்டமைக்கு பொறுப்பாகவுள்ள ஆட்களைக் கண்டறிவதற்கும் ;

4. மேற்போந்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அத்தகைய நிகழ்வுகள் தொடர்பில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள சான்றுகளைக் கண்டறிவதற்கும் சேகரிப்பதற்கும் அத்தகைய நிகழ்வுகளினதும் பிழையான நடவடிக்கைகளினதும் தொடர்பில் தவறுகளைச் செய்வதற்குப் பொறுப்பாக இருந்த ஆட்களையும் கண்டறிவதற்கும் அவர்களுக்கு எதிரான சான்றுகளைச் சேகரிப்பதற்கும் ;

5. மேலே உள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளின் சுற்றெல்லைக்குள் எந்த நிகழ்வுகள் வருகின்றன என்பதைக் கண்டறிந்து மேற்கூறிய தவறுகளைப் புரிந்தவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் தேவையான ஆய்வுகளையும் விசாரணைகளையும் நடாத்துவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களையும் ஆய்வுகளையும் விசாரணை செய்கின்றதுமான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசாருக்குத்

தேவையான விசாரணைகளையும் ஆய்வுகளையும் நடாத்துவதன் பொருட்டு தவறுகளைப் புரிந்துவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் அத்தகைய சாதனங்கள் பெறப்படுவதன்படி அல்லது இந்த ஆணைக்குழுவினால் சேகரிக்கப்படுவதன்படி அந்த ஆணைக்குழுவுக்கும் அல்லது பொலிசாருக்கும் அல்லது பிற எந்த நியதிச் சட்டமுறை அதிகாரபீடத்திற்கும் சமர்ப்பிக்கப்படுவதற்கும் ;

6. மேற்கூறிய தவறுகளை விளைவிப்பதற்கு பொறுப்பாக உள்ள குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பற்றி சட்டமா அதிபர் பரிசீலனை செய்வதை இயலச் செய்வதன்பொருட்டு சட்ட மா அதிபருக்கு ஆய்வு செய்யப்படும் சாதனங்களையும் விசாரணை சாதனங்களையும் சமர்ப்பிப்பதற்கும் ;

7. தவறுகளும் பிழையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவற்கு பொறுப்பாக இருந்தவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் இந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை நிரலொன்று தேவையான ஆதரவுச் சாதனங்களுடன் ஆணைக்குழுவின் ஆய்வு மற்றும் விசாரணை காண்புகளின் பொழிப்பொன்றைக் கொண்டுள்ள இறுதி அறிக்கையொன்றும் இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை சமர்ப்பிக்கப்படும் இடைக்கால அறிக்கைகளும் எனக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கும் ;

அத்துடன், மேற்சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகிய சனாதிபதி சட்டத்தரணி மாண்புமிகு வெவகே பிரியசாத் ஜெராட் டெப் ஆகிய தங்களை நான் இத்தால் நியமிக்கின்றேன்.

அத்துடன், சொல்லப்பட்ட ஆணையாளர்களாகிய தங்களுக்கு தோற்றப்படக்கூடியவாறான மேலே சொல்லப்பட்ட விடயங்கள் பற்றி தேவையான குற்றவியல் மற்றும் சட்டமருத்துவ ஆய்வுகளை நடாத்துவதற்கும் அல்லது நடாத்துவிப்பதற்கும் அத்துடன் தேவையென தோற்றப்படக்கூடிய மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பில் சகல பகிரங்கமான விசாரணைகளையும் அல்லது அத்துடன் அந்தரங்கமான விடயங்களையும் புலனாய்வு செய்வதற்கும் அல்லது விசாரணைகளை நடாத்துவதற்கும் இந்த பற்றாணைத் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் முதலாவது இடைக்கால அறிக்கையை அனுப்புவதற்கும் அதன்பின்னர் இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை அடுத்துவரும் இடைக்கால அறிக்கைகளையும் தங்களுடைய கைவசமுள்ள திகதியிலிருந்து ஓராண்டுக் காலத்திற்குள் இறுதி அறிக்கையையும் தங்களுடைய விசாரணைகளின் காண்புகளைக் குறிப்பிட்டு அவற்றையும் அவை தொடர்பிலான தங்களுடைய சிபார்சுகளையும் எனக்கு அனுப்பிவைக்குமாறும் தங்களை இத்தால் தேவைப்படுத்துகின்றேன் ;

அத்துடன் இந்த ஆணைக்குழுக் கூட்டங்களின் கூட்ட நடப்பெண்ணுக்காக தங்களிடையில் எவரேனும் ஆணையாளர்கள் மூவர் அத்தியாவசியமாக இதில் பங்குபற்ற வேண்டுமென இத்தால் பணிப்பு விடுக்கின்றேன்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பில் தங்களின் தற்றுணிபின்படி தங்களினால் நிர்ணயிக்கப்படும் மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பிலான எந்த விசாரணையினதும் எத்தகைய பகுதியும் பகிரங்கமாக நடாத்தப்படலாகாது என நான் இத்தால் பணிப்பு விடுகின்றேன் ;

அத்துடன், இத்தால் தாங்கள் உதவியை அல்லது தகவல்களைப் பெறுவதற்காக நாடுகின்ற சகல அரச சேவையாளர்களுக்கும் நியதிச் சட்டமுறைச் சபைகளின் உத்தியோகத்தர்களுக்கும் பிற நபர்களுக்கும் அத்தகைய உதவியை வழங்குமாறும் சகல தகவல்களையும் வழங்குமாறும் அவர்களை நான் இத்தால் கோருவதுடன் அவர்களுக்குப் பணிப்பும் விடுக்கின்றேன்;

அத்துடன், மேற்சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் விசாரணை சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலாஞ்சினையின் கீழ் 2015 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 03 ஆந் நாளாகிய இன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்
சனாதிபதியின் செயலாளர்

3 – 625